பதிவு எண் : N. 6311 ★ தொலைபேசி : 51331 ★ ஏறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 30உ (16—11—67) வியாழன் வெளியூர் : கார்த்திகை 1உ (17—11—67) வெள்ளி [இதழ் : 128

பீகாரில் நடக்கும் பின்தங்கியோர் மாநாடு

புதுடில்லி, நவ. 15—

பல்வேறு துறைகளிலும் உள்ள பின்தங்கிய மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தக் கோரும் மாநாடு ஒன்று சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் ஆதரவில் பீகார் மாநிலத்தில் வருகிற மார்ச்சுத் திங்களில் நடைபெறும் என்றும் அந்த மாநாட்டைத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைப்பார்கள் என்றும் பீகார் அமைச்சர் போலோ பிரசாத் சிங் இங்கு தெரிவித்தார்.

'இதயத்தைப் பரிசாக்குகிறேன்'

தென் சென்னை வெற்றி வீரர்

மாறனுக்குப் பாராட்டு

வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து அண்ணா மற்றும் தலைவர்கள் உரை

சென்னை, நவ. 16—

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற முரசொலி மாறன் அவர்களைப் பாராட்டி, வாக்காளர்கட்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டம் நேற்று மாலை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் எழிலோடும் பொலிவோடும் நடைபெற்றது.

ஏராளமான தாய்மார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர்.

கூட்டத்திற்குச் செல்லும் நுழைவு வாயிலில் உதய சூரியன் ஒளிமுகப்பு அமைத்து, அதில் வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன!

கூட்டத்தினரை வரவேற்ற மாவட்டத் துணைச்செயலாளர் **சு. பாலன்**, மாவட்டச் செயலாளர் **நீலநாராயணன்** அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார்; மாவட்டப் பொருளாளர் **டி. கே. கபாலி** வழிமொழிந்தார்.

திருமணம்

தலைவரின் முன்னுரைக்குப் பின், மேடையில் அமைப்புச் செயலாளர் திரு. **என். வி. நடராசன்** எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் ஒரு விதவைத் திருமணம் நடைபெற்றது.

அரக்கோணம் வட்டம் தக்கோலத்தைச் சேர்ந்த இராசுவுக்கும்—நகரிக்குப்பத்தைச் சேர்ந்த திருமதி மங்கம்மாவுக்கும் திருமணத்தை நடத்திவைத்தார்—திரு. என். வி. நடராசன்.

மணமக்கள் சார்பில் தீவிபத்து நிதிக்கு ரூ. 25 அமைப்புச் செயலாளரிடம் அளிக்கப்பட்டது.

அடுத்து திரு.என்.வி.என். அவர்கள் முரசொலி மாறனைப் பாராட்டியும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தும் பேசினார்.

மாணவர் **இரா. சனார்த்தனம்** மாணவர்கள் சார்பில் பாராட்டுரை வழங்கினார்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் திரு. **இரா. தர்மலிங்கம்** தமது மாவட்டத்தின் சார்பில் பாராட்டிப் பேசினார்.

அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **க. இராசாராம்** பி.ஏ. பாராட்டுரை வழங்கினார்.

தஞ்சை மாவட்டச் சார்பில் **மன்னை நாராயணசாமி** அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.

அடுத்து சட்டத் துறை அமைச்சர் திரு. **செ. மாதவன்**, வெற்றி வீரர் மாறனைப் பாராட்டியும், இந்தி ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தும் உரையாற்றினார்.

அடுத்து, திருச்சி மாவட்டச் செயலாளர் திரு. **அன்பில் தர்மலிங்கம்**, தமது மாவட்டத்தின் சார்பில் பாராட்டுத் தெரிவித்துப் பேசினார்.

பின்னர் மதுரை மாவட்டச் சார்பில், **மதுரை எஸ். முத்து** எம்.எல்.சி. அவர்கள் பாராட்டுரை நிகழ்த்தினார்.

அடுத்து, இலட்சிய நடிகர் **எஸ். எஸ். இராசேந்திரன்**, மாறனை பாராட்டியும், காங்கிரசாரின் **போக்கைக் கண்டித்தும்** பேசினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் **சிட்டி பாபு**—'ஆயிரம் விளக்குப் பகுதிச் செயலாளர்' என்ற முறையில்—தமது பகுதியின சார்பில் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அடுத்து செய்திக் துறையமைச்சர் திருமதி **சத்தியவாணிமுத்து** அவர்கள், தாய்மார்கள் சார்பில் பாராட்டிப் பேசினார்கள்.

அடுத்து கல்வியமைச்சர் திரு. **இரா. நெடுஞ்செழியன்** அவர்கள், முரசொலி மாறனைப் பாராட்டியும், வெற்றிக்கு உழைத்த கழகத் தோழர்களைப் பாராட்டியும் வாக்காளர்கட்கு நன்றி தெரிவித்தும் பேசினார்.

அடுத்து **முரசொலி மாறன்** தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி கூறியும், தம்மை வெற்றி பெறச் செயத வாக்காளர் பெருமக்களுக்கும், தமது வெற்றிக்கு உழைத்த கழகத் தொண்டர்கட்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும், அறிஞர் அண்ணா அவர்கட்கும் நன்றி தெரிவித்தும் பேசினார்.

இறுதியாக **அறிஞர் அண்ணா** அவர்கள் உரையாற்றினார்கள்.

முரசொலி மாறன் அவர்கட்கும் இராஜாஜி சார்பில் அனுப்பிவைக்கப்பட்ட ஒரு மல்லிகைப் பூமாலை அணிவிக்கப்பட்டது.

திருச்சி மாவட்டச் சார்பில் அன்பில் தர்மலிங்கமும், மதுரை மாவட்டச் சார்பில் மதுரை முத்துவும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும், மாறன் அவர்களுக்கும் சால்வை போர்த்தினர்.

மற்றும், தஞ்சை மாவட்டச் சார்பில் மன்னை நாராயணசாமியும் வ. ஆ. மாவட்டச் சார்பில் இரா. தர்மலிங்கமும், சென்னை மாவட்டச் சார்பில் டி. கே. கபாலியும் மாலையணிவித்தனர்.

கலைவாணர் நிலையச் சார்பில் 'வாய்மையே வெல்லும்' என்று பொறிக்கப்பட்ட பேனா ஒன்று மாறனுக்கு வழங்கப்பட்டது.

சலவைத் தொழிலாளர் சார்பில் சி. ஆர். கோலப்பா மாலையணிவித்தார்.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ், சத்யா ஸ்டுடியோ, சத்தியராஜா பிக்சர்ஸ் ஆகியவை சார்பிலும், எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ் சார்பிலும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கல்லூரி மாணவர்கள் சார்பில் இரா. சனார்த்தனம், துரை முருகன், மற்றும் பல மாணவர்கள் மாலையணிவித்தனர்.

காதில் விழுந்தது!

"நேற்றிரவு பாட்டீல் வீட்டில் காங்கிரசுத் தலைவர்களுக்கு விருந்தாமே?"

"இப்போது என்ன-அதற்குத் தேவை வந்ததாம்?"

"காரணமில்லாமலா? கட்சியின் தேர்தலுக்கு நிற்கிறாரே பாட்டீல்—எல்லோரையும் வீட்டுக்கு அழைத்து 'கை நனைய'ச் செய்துவிட்டால், 'நமக்குக் கருணை காட்ட மாட்டார்களா' என்ற எண்ணம்தான்! உப்பிட்ட வீட்டிற்கு 'ரெண்டகம்' நினைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கைதான்!"

மண்டலக் காங்கிரசுத் தலைவராக இருந்து தி. மு. கழகத்தில் சேர்ந்த பூங்காவனம் என்ற முதியவர் மாலையணிவித்தார்.

96-வது வட்டத் தோழர் கோ. அய்யாவு, ஒரு பெட்டி கொடுத்தார்.

உழைக்கும் தொழிலாளர் சார்பில் ரிக்ஷா தொழிலாளி ஒருவர் பேனா கொடுத்தார்.

கீதா ஓட்டல் தொழிலாளர் சார்பிலும் கோவை—சிங்காநல்லூர், திருக்கழுக்குன்றம், ஆலந்தூர் மற்றும் பல வெளியூர்களைச் சேர்ந்த கிளைக் கழகங்கள் சார்பிலும், சென்னையில் உள்ள பகுதிக் கழகங்கள்—வட்டக் கழகங்கள்—துணை மன்றங்கள் — தனிப்பட்டவர்கள் சார்பிலும் கைத்தறியாடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

மற்றொரு திருமணம்

அண்ணா அவர்கள் பேசி முடித்ததும் அமைச்சர் **மா. முத்துசாமி** அவர்களால் சென்னை 9-வது வட்டம் மீனாட்சியம்மன் பேட்டையைச் சேர்ந்த மணமகன் இரா. சுப்பிரமணியம்—மணமகள் கோ. கலாநிதி ஆகியோருக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

பரிசளிப்புகள்

அறிஞர் அண்ணா அவர்கள் அதிக வாக்குகள் பெற்றுத் தந்த தொகுதிகட்கும் வட்டங்கட்கும் பரிசளித்தார்.

தொகுதிகளில் முதலாவதாக சைதைத் தொகுதிக்கும், இரண்டாவதாக ஆயிரம்விளக்குத் தொகுதிக்கும், மூன்றாவதாக எழும்பூர் தொகுதிக்கும் கேடயங்கள் அளிக்கப்பட்டன.

51-வது வட்டம், 71-வது வட்டம், 77-வது வட்டம், 89-வதுவட்டம், 94-வதுவட்டம், 91-வது வட்டம் ஆகியவை, அந்தந்தத்தொகுதிகளில் அதிக வாக்குகளைப் பெற்றுத் தந்ததற்காகக் கேடயப் பரிசுகளைப் பெற்றன.

தென் சென்னையிலேயே அதிக வாக்குப் பெற்றுத்தந்த 91-வது வட்டத்துக்கு அன்பில் தர்மலிங்கம் சார்பில் ஒரு கேடயம் வழங்கப்பட்டது.

கொண்டியம்பதி எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் ஒரு வீர வாள், 91-வது வட்டத்துக்கு வழங்கப்பட்டது.

வெற்றிக்கு உழைத்த தொண்டர்கட்கு அண்ணா பாராட்டுரை

கழகத்தின்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தோருக்குத் தலைவணக்கம்

சென்னை, நவ. 16—

தென் சென்னை இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற முரசொலி மாறனைப் பாராட்டவும், வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் நேற்று மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றுகையில், கழக வெற்றிக்கு அரும்பாடுபட்ட தோழர்கள் அனைவரையும் சிறப்பித்துக்கூறிப் பாராட்டியதுடன், அடுத்து எதிர்நோக்கியுள்ள கடமைகளையும், பொறுப்பினையும் உணர்த்தினார்கள்.

கழகத்தின்மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதிபபடுத்தும் வகையில் வாக்களித்து வெற்றிபெறச் செய்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். அவர் மேலும் கூறியதாவது:—

நமக்கு வெற்றி கிடைப்பதற்குக் காரணம், தமது தோழர்களின் முதல்தரமான உழைப்புதான்!

சிலர் கைகளில் மட்டுமே இங்கு பரிசுகள் கொடுக்கப்பட்டன; பலருக்குக் கிடைக்காமல் இருக்கலாம்; அவர்களது கரங்களிலெல்லாம், பரிசுகளைவிட மேலான என் இதயம் இருக்கிறது!

மக்கள் இந்த முறையும் நம்மிடம் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த நம்பிக்கைக்கு நமது தலைவணக்கம்!

(பேச்சின் விவரம் நாளை)

நாடாளுமன்றத்தில் மீண்டும் இந்திப்பிரச்சினை

தென் சென்னை முடிவைக் காட்டி

கழக உறுப்பினர் விசுவநாதனின் முதல் எச்சரிக்கை

கல்விக் குழு அறிக்கைமீதான நேற்றைய நாடாளுமன்ற நடவடிக்கைகளில் ஆந்திரக் காங்கிரசு உறுப்பினர் திருமதி இலட்சுமி காந்தம்மாவுக்கும்—கழக உறுப்பினர் கோ. விசுவநாதனுக்குமிடையே இந்தி மொழிபற்றி சூடான விவாதம் நடைபெற்றிருக்கிறது.

"சென்னையில் மிகச் சிலரே இந்தியை எதிர்க்கிறார்கள்" என்று திருமதி இலட்சுமி காந்தம்மா பேசியபோது, கழக உறுப்பினர் விசுவநாதன் கோபத்துடன் எழுந்து, சில நாட்களுக்கு முன்னர், தென் சென்னையில் காங்கிரசு பெற்ற பலத்த தோல்வியைச் சுட்டிக் காட்டினார்.

"தென் சென்னைத் தேர்தலே மொழிப் பிரச்சினை குறித்து தான் நடைபெற்றது; கழகம் இந்தி ஆட்சி மொழியாவதற்கு முழு எதிர்ப்பினைக் காட்டுகிறது; அதற்கு மக்கள் ஆதரவும் இருக்கிறது என்பதனை இத்தேர்தலில் அது பெற்ற வெற்றி எடுத்துக் காட்டுகிறது"

என்று தோழர் விசுவநாதன் பேசியபோது, "கழகத்தின வெற்றி 'இந்தி மொழியை அப்புறப்படுத்திவிடும்' என்று மக்கள் தவறாக உணர்த்தப்பட்டதால் தான் இந்த வெற்றி" என திருமதி இலட்சுமி காந்தம்மா குறுக்கிட்டுக் கூறினார்; அவருக்கு உடன் பதிலளிக்கும் வகையில் விசுவநாதன்,

"தமிழகத்து(சென்னை) மக்கள், மற்ற எல்லோரையும்விட சிறிதாவது-அதிகமாகத்தான் தெரிந்து வைத்திருக்கிறார்கள். 'இந்தியாவிலேயே சிறந்த ஆட்சி நடைபெறுகிறது' எனப் போற்றப்படும் தமிழக அரசினர், 'தாம் என்ன செய்கிறோம் என்பதனை உணராமல் செய்கின்றனர்' என அம்மையார் கருதுகிறாரா?"

என்று வினவியதுடன், 'மத்திய ஆட்சியின் சில ஏஜெண்டுகள், மொழித் துறையில் புதுடில்லியின் அடியை வருடிக் கொண்டிருக்கிறார்கள்; இறுதியில் அவர்கள் நிச்சயமாகத் தோற்பார்கள்' எனவும் எச்சரித்தார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எல்லி
திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 30 (16—11—67) வியாழன்

எதிர்க் கட்சியாக இயங்கவும் தகுதி இல்லை!

இவ்வாண்டு பிப்ரவரித் திங்கள் வரையில், காங்கிரசுக் கட்சியே இருபதாண்டுக்காலமாகத் தொடர்ந்தாற்போலத் தமிழக ஆட்சிப் பொறுப்பிலிருந்துவந்தது. அண்மையில் நடைபெற்ற நான்காவது பொதுத் தேர்தலில்தான், தமிழக ஆட்சிப் பொறுப்பை முன்னேற்றக் கழகத்திடம் தமிழக மக்கள் ஒப்படைத்தனர்.

தமிழகத்தில் மட்டுந்தான் காங்கிரசுக் கட்சியை ஆட்சிப் பொறுப்பிலிருந்து வாக்காளர்கள் விரட்டிவிட்டனர் என்பதில்லை; ஒன்பது மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பை இன்று காங்கிரசுக் கட்சி கோட்டைவிட்டிருக்கிறது. மணிப்பூரிலும் அண்மையில் தான் காங்கிரசுக் கட்சி பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருக்கிறது.

மாநிலங்களில் மட்டுந்தான் காங்கிரசுக் கட்சி, 'இருந்ததை இழந்துவிட்டிருக்கிறது' என்பதில்லை; இந்திய அரசிலும் ஏற்கனவே பெற்றிருந்த வலிவை, இத்தோதலில் அதனால் பெற முடியவில்லை. இப்பொழுது எண்ணிக்கையில் குறைந்தவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைச்சரவையாகவே இந்திய அமைச்சரவை இருந்துவருகிறது.

தமிழகத்தைப்போன்றே மற்ற ஒன்பது மாநிலங்களிலும், காங்கிரசல்லாத ஆட்சி அமைந்திருந்தபோதிலும், அங்கெல்லாம் ஒரு கட்சி ஆட்சி இல்லை; பல அரசியல் கட்சிகள் கூட்டாகச் சேர்ந்தே அம்மாநிலங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளன.

ஆனால் தமிழகத்திலோ, அந்த நிலை இல்லை. பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி நீங்கலாக மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் முன்னேற்றக் கழகத்தை ஆதரித்தன என்றாலும், தனித்த முறையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளத்தக்க எண்ணிக்கை பலம் முன்னேற்றக் கழகத்துக்குக் கிடைத்தது. எனவே, முன்னேற்றக் கழகம் தனித்து நின்று தமிழகத்தில் அரசு அமைத்திடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றது.

காங்கிரசுக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலிருந்துவந்த காலத்தில், காலஞ்சென்ற பண்டித நேரு முதல் காமராசர் ஈறாக உள்ள காங்கிரசுத் தலைவர்கள் அனைவரும், 'காங்கிரசுக் கட்சிக்குப் பதிலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத்தக்க எதிர்க் கட்சி உருவாகவில்லையே—இருக்கின்ற எதிர்க் கட்சிகள் அனைத்தையும். 'எதிர்க் கட்சி'கள் என ஏற்றுக்கொள்ளுவதற்கே தகுதி இல்லாததாக உள்ளனவே'—என்றெல்லாம், எப்பொழுதும் கூறிவந்தார்கள். இப்படி அலர்கள் கூறிவந்தனர் என்பது மட்டுமல்ல; இந்த நச்சுப் பிரச்சாரத்தை முழுமூச்சாகச் செய்தும் வந்தனர் காங்கிரசுத் தலைவர்கள்!

எதிர்க் கட்சிகளைப் பற்றிய இந்த நச்சுப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுவந்ததுடன் அவர்கள் இருந்துவிடவில்லை; சிறந்த இலட்சியங்களைக் கொண்டு எதிர்க் கட்சிகள் உருவாகி வலுப்பெற்று வருவதற்கும் காங்கிரசுத் தலைவர்கள் வாய்ப்பளிக்கவில்லை. காங்கிரசுத் தலைவர்களின் பலமான எதிர்ப்புக்கிடையில் தக்க குறிக்கோளுடன் தோன்றி—மெல்ல மெல்லத் தலைதூக்கிவருகின்ற எதிர்க் கட்சிகளை, அக்கட்சிகளுக்குள்ளாகவே குழப்பத்தை விதைத்து உருக்குலைப்பதிலும், சிதைப்பதிலும் காங்கிரசுக் தலைவர்கள் முனைந்திருந்தனர். எதிர்க் கட்சிகளைச் சதி செய்து சீரழிக்கும் தங்கள் திருப்பணியில், காங்கிரசுத் தலைவர்கள் ஓரளவுக்கு வெற்றியும் கண்டனர்.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், முன்னேற்றக் கழகத்தை அழித்தொழிக்கக் காங்கிரசுத் தலைவர்கள் எடுத்துக் கொண்ட தரம் குறைந்த முயற்சிகளும், பயங்கரமான சதிச் செயல்களும், கழகத் தலைமையால் முறியடிக்கப்பட்டுவிட்டன. காங்கிரசுத் தலைவர்கள் மேற்கொண்ட ஈனச் செயல்கள் கழகத்தைக் குலைப்பதற்குப் பதிலாக, கழகம் மேலும் வலிவு பெறுவதற்கே பயன்பட்டன.

ஆளும் கட்சியாக இருபதாண்டுக்காலம் காங்கிரசுக் கட்சி புரிந்த சாதனை, இப்பொழுது எத்தகைய வேதனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றுகள் தேவையில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்க முடியாமல், இரண்டாண்டுகளுக்குப் பின்னரும் இப்பொழுது இந்திய அரசு திணறிக் கொண்டிருக்கின்ற ஒன்றே போதும்—காங்கிரசுக் கட்சியின் நாடாண்ட திறமையைத் தெரிந்துகொள்ள!

காங்கிரசுக் கட்சிக்கு நாடாளக்கூடிய தகுதியும் திறமையும் இருக்கின்றனவோ இல்லையோ—எப்படியோ இருந்து தொலையட்டும்; 'எதிர்க் கட்சிகள் எப்படிச் செயல்பட்டு வரவேண்டும்' என்கின்ற மரபினை உருவாக்குவதற்கு ஏற்றவகையில் எதிர்க் கட்சியாக இருந்து செயல்பட்டு வருவதற்கான தகுதியும், திறமையும் காங்கிரசுக் கட்சிக்கு இருக்கின்றதா என்பதுதான், இன்றையக் கேள்வி.

இந்தக் கேள்விக்கு, 'ஆம்' என்று தயங்கித் தயங்கிக்கூடக் கூறுவதற்கில்லை. எதிர்க் கட்சியாகச் செயல்படக்கூடிய தகுதி சிறிதளவும் காங்கிரசுக் கட்சிக்கு இல்லை—ஒருகாலும் இருக்கவும் முடியாது என்றுதான் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

'எதிர்க் கட்சியாக இருந்து சிறப்பாகச் செயல்படுவதற்கான அருகதை, காங்கிரசுக் கட்சிக்கு இல்லை' என்பதற்கு, தமிழகத்தில் அமைந்துள்ள கழக ஆட்சிக்கு எதிராகக் கடந்த எட்டுத் திங்களாக, 'காங்கிரசுக் கட்சித் தலைவர்கள்' எனச் சொல்லிக்கொள்ளப்படுகின்றவர்களும், 'காங்கிரசு ஏடுகள்' என விளம்பரம் செய்துகொண்டு வெளிவருகின்ற நாள்—கிழமை ஏடுகளும் புரிந்துவருகின்ற பொய்ப் பிரச்சாரங்களும், தரக்குறைவான தூற்றல்களும் மறுக்க முடியாத சான்றுகளாகும்.

தாங்கள் ஆட்சியிலிருந்த காலத்தில், குறிப்பாகக் கழகமும், பொதுவாக மற்ற எதிர்க் கட்சிகளும் ஆட்சிக்கு எதிராக அமைதியான அறக் கிளர்ச்சிகளை மேற்கொண்டால், கொடிய அடக்கு முறைகளைக் கொண்டு அவ்வறக் கிளர்ச்சிகளை அழித்திடத் துணிந்ததுடன், மறைமுகமாகக் குண்டர்களை ஏவி, அறக் கிளர்ச்சியை மேற்கொண்ட கட்சியினரைத் தனித்த முறையில் வெட்டவும் குத்தவும் காங்கிரசு ஆட்சியினர் துணிந்தனர்.

இதுவுமன்றி, கழகமும் மற்ற கட்சிகளும் முன்னின்று நடத்திய அறக் கிளர்ச்சிகளை வன்மையாகக் கண்டித்ததுடன், 'இவ்வாறு கிளர்ச்சி செய்வதற்கு சனநாயக ஆட்சியில் இடம் கிடையாது' என்றும், 'இத்தகைய கிளர்ச்சிகளால் சனநாயக அமைப்பு சீர்குலைந்துவிடும்' என்றும் காங்கிரசு ஆட்சியினர், 'அரசியல் அறநெறி' போதனை செய்துவந்தனர்.

"காங்கிரசுக் கட்சியினரைப் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்து, ஆட்சிப் பொறுப்பைக் காங்கிரசுக் கட்சியிடம் ஒப்படைத்திருக்கின்றனர்; காங்கிரசு ஆட்சியில் குறைகள் இருந்திடக் கண்டால், அதைச் சுட்டிக்காட்டிப் பிரச்சாரம் செய்கின்ற அளவுடன் தங்கள் பணிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும்; ஐந்தாண்டுக் காலம்வரையில்—அதாவது, அடுத்து வரக்கூடிய பொதுத் தேர்தல் வரையில்—எதிர்க் கட்சியினர் காத்துக்கொண்டிருக்க வேண்டும்; பொதுத் தேர்தலின்பொழுதுதான், காங்கிரசுக் கட்சியில் தாம் கண்ட குறைகளை வாக்காளர்களிடம் எடுத்துச் சொல்லி, அவர்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரசுக் கட்சியை வெளியேற்ற வேண்டும்; இதைத்தான்—இந்த ஒன்றைத்தான் எதிர்க் கட்சியினர் செயல்படுத்த வேண்டும்; இவ்வாறு செயல்படுவதுதான் சிறந்த எதிர்க் கட்சிக்குரிய கடமை—இதுதான் சனநாயக ஆட்சிமுறையில், எதிர்க் கட்சிக்குரிய கடமையாகும்"—இப்படி, அன்று எதிர்க் கட்சிக்கு 'அரசியல் அறநெறி' போதித்தனர்—'காங்கிரசுத் தலைவர்கள்' எனப்படுகின்றவர்கள்!

ஆட்சிப் பொறுப்பிலிருந்து கொண்டு, 'எப்படிச் செயல்பட்டு வர வேண்டும்' என அன்று எதிர்க் கட்சியினருக்குக் காங்கிரசுக் கட்சியினர், மேற்குறிப்பிட்டிருக்கின்றவாறு நாள் தவறாமல் போதித்து வந்தனர்.

ஆளும் கட்சியாக இருந்து அன்று தாங்கள் செய்துவந்த போதனையை, தாங்களே எதிர்க் கட்சியாக இருந்து செயலாற்ற வேண்டிய வாய்ப்பு, இப்பொழுதுதான் காங்கிரசுக் கட்சியினருக்கு ஏற்பட்டிருக்கிறது. அன்று தாங்கள் எதிர்க் கட்சிக்குச் செய்த போதனையை எதிர்க் கட்சியாக உள்ள இந்த நிலையில் திறம்படச் செயல்படுத்த வேண்டியதுதான் காங்கிரசுக் கட்சியினரின் தலையாய கடமையாகும். இதைத்தான் காங்கிரசுக் கட்சியினரிடம் எவரும் எதிர்பார்ப்பர்.

ஆனால் காங்கிரசுக் கட்சியினரோ, 'எதிர்க் கட்சியாகச் செயல்படுவதற்கான தகுதி துளியும் தங்களுக்குக் கிடையாது' என்ற உண்மையை, தங்கள் 'திருப்பணி' மூலம் நிலைநாட்டி வருகின்றனர். எதிர்க் கட்சிகளுக்கு, ஆளும் கட்சியாக இருந்த அன்று அறிவுறுத்திய 'ஐந்தாண்டுக்காலப் பத்தியம்', இன்று, தங்களால் நிறைவேற்ற முடியாத 'கடும் பத்தியம்' ஆகும் என முடிவு கட்டிக்கொண்டுவிட்டனர்.

கழகம் அமைத்துள்ள அரசை எப்படிக் கவிழ்ப்பது? எப்பொழுது கவிழ்ப்பது?—என்ற ஒரே நினைப்பில், ஆட்சிக்கு எதிராகக் கனல் கக்கி வருகின்றனர்—காங்கிரசுக் கட்சியினர்!

'கலகத்தை எவரைக் கொண்டு மூட்டுவது? குழப்பத்தை விதைத்திடத்தக்கவர் எவர்? எவரைக் கொண்டு எந்தக் கிளர்ச்சியைத் துவங்குவது?' என்ற கெடுநினைப்புகளே இன்றையக் காங்கிரசுக் கட்சியின் மூளையில் நிரம்பி வழிந்துகொண்டுள்ளன. இதன் மூலமாக, சிறந்த எதிர்க் கட்சியாகச் செயல்படக்கூடிய தகுதி தங்களுக்குக் கடுகளவும் இல்லை—இருக்க முடியாது என்ற உண்மையை, காங்கிரசுக் கட்சியினர் இப்பொழுது விளம்பரப்படுத்தி வருகின்றனர்.

—கா. க.

அநீதியை ஒழிக்கும் 'அவதாரம்' கல்வியே!

★

"'நாட்டில் அநீதி அதிகமாகிவிட்டால் அதை அடக்கக் கடவுள் அவதாரம் எடுப்பார்' என்று 'புராணம்' கூறுகிறது! மகா விஷ்ணுகூட அநீதியைத் தடுக்க பத்து அவதாரம் எடுத்ததாகப் 'புராணம்' சொல்கிறது!

"ஆனால், நாட்டில் இப்போது இருக்கும் அக்கிரமத்தையும், பதுக்கலையும், கள்ள வாணிபத்தையும் ஒடுக்கக், கடவுள் ஒரு நாளைக்குப் பத்து அவதாரம் எடுத்தாலும் முடியாதுபோல் இருக்கிறது! அந்த அளவுக்கு நாட்டின் நிலைமை சீர்கெட்டு இருக்கிறது.

"இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்றால், கல்வி ஒன்றினால் தான் முடியும்!

'கடந்த சில ஆண்டுகளாகக் கல்வி அறிவு இல்லாமலேயே நாட்டில் சிறந்தவர்களாக வாழ முடியும் என்ற நிலை மக்களின் மனத்தில் ஊறிவந்தது; இப்போது அது மறுக்கப்பட்டு வருகிறது; இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்."

—அறிஞர் அண்ணா

(திருவல்லிக்கேணி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில்)

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தனி அஞ்சல் தலை வெளியீடு

டில்லியிடம் தமிழக அரசு கோரிக்கை

ரூ. 10 இலட்சம்வரை நிதி திரட்ட ஏற்பாடு

அடுத்த ஆண்டு சனவரியில் சென்னையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கான சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது; இதில் திருக்குறள் நூல்—உலகம்—கோபுரம் ஆகியவை அடங்கியுள்ளன; 'திருக்குறள்' என்று தமிழிலும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ்ச் சொற்றொடரின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இடம்பெற்றுள்ளன.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இந்தச் சின்னம் பொறித்த அஞ்சல் தலை வெளியிடுமாறு தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

நிதி திரட்ட ஏற்பாடு

தமிழ் மாநாட்டுச் செலவுக்காக ரூ. 10 இலட்சம் வரை நிதி திரட்ட விழாக் குழுவினர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நிதி திரட்டுவதற்கான ஏற்பாடுகள் வருமாறு:—

மதுரை' திருச்சி, சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கோவை, வேலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற கலைஞர்களைக் கொண்டு கலை விழாக்கள் நடத்தப்படும்.

தொழிலதிபர்கள், மற்றும் பலரிடமிருந்து நன்கொடைகள் வசூலிக்கப்படும்.

மாநாட்டின்போது கலை நிகழ்ச்சிகள் நடக்கும்; அவற்றிற்குக் கட்டணம் உண்டு.

மாநாட்டுக்கான கொடிகள் விற்கப்படும்.

மாநாட்டுப் பிரதிநிதிகள், பார்வையாளர்களுக்குக் கட்டணம் உண்டு.

இந்த வசூல் மூலம் கிடைக்கும் தொகையில் ரூ, 2 இலட்சம் மாநாட்டுக்காகச் செலவிடப்படும்; பாக்கி ரூ. 3 இலட்சம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சி பிரிவு ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்படும்.

தமிழர் கலாச்சாரங்களை விளக்கும் கண்காட்சியை குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் தலைமையில் முதல அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்.

விழாவையொட்டி மலர் வெளியிடப்படும். மாநாட்டையொட்டி அறிவிக்கப்பட்டிருக்கும் கவிதைப் போட்டிக்கு இதுவரை 1,120 கவிதைகள் வந்துள்ளன; இவற்றில் 101 கவிதைகள் இலங்கை, மலேசியா போன்ற இடங்களில் இருந்து வந்தவை ஆகும்.

கவிதைப் பற்றிப் பரிசீலனை நடந்து வருகிறது; தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கவிதைகளுக்குத் தங்கப் பதக்கம் பரிசு அளிக்கப்படும். இவற்றில் 150 கவிதைகள் புத்தகமாக வெளியிடப்படும்.

கவிதைகளுக்கு மொத்தம் 10 பரிசுகள் வழங்கப்படும். இவற்றில் 5 பரிசுகளை முதலமைச்சர் அண்ணா மற்றும் அமைச்சர்கள் மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், மா. முத்துசாமி, ஆகியோரும், திரு. கி. ஆ. பெ. விசுவநாதமும் வழங்குவர்; மீதி 5 பரிசுகளை விழாக் குழுவினர் வழங்குவர்.

மழலைச் செல்வங்களின் வாழ்த்தொலிக்கிடை அறிஞர் அண்ணா

சென்னை, நவ. 14—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நேரு விளையாட்டு அரங்கில் இன்று குழந்தைகள் நாள் விழாவில் குழுமியிருந்த பள்ளிச் சிறுவர்—சிறுமியர் மிகச் சிறப்பான வரவேற்பளித்தனர்!

அறிஞர் அண்ணா அவர்களும்—அண்ணி இராணி அம்மையாரும் விழா மேடைக்கு வந்த போது, குழந்தைகள் 'அண்ணா வாழ்க' என்ற வாழ்த்தொலியினைப் பல நிமிட நேரம் எழுப்பினர்!

மேடையிலிருந்தபடியே அறிஞர் அண்ணா அவர்கள் குழந்தைகளைப் பார்த்துக் கையசைத்த போது, சிறுவர்—சிறுமியர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்!

அவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்று—அண்ணா அவர்களை நோக்கி வாழ்த்தொலி எழுப்பி—தங்கள் கரங்களை அசைத்த காட்சி நெஞ்சை நெகிழச்செய்வதாக இருந்தது!

'பேசி வீணாக்கும் நேரத்தைப் பயனுள்ளதாக்குவோம்'

'இருக்கின்ற வலிமையைக்கொண்டு ஊருக்கு உழைப்போம்'

வட ஆற்காடு சீரணித் துவக்க விழாவில் அறிஞர் அண்ணா உரை

"மேலை நாடுகளில் 'தங்களுக்கு நேரமே போதவில்லை' என்கிறார்கள்; ஆனால் நாமோ, 'பொழுதே போகவில்லையே' என்கிறோம்; ஆகவேதான், தெருத்தெருவாகச் சுற்றிவர ஆரம்பிக்கிறோம்.

"வண்டுகள்கூடச் சுற்றிச்சுற்றி வருகின்றன—ஆனால் மலர்களை நாடி! நாமும் சுற்றிவருகிறோம்—வீணாக! நடந்த காரியமும் ஏதுமில்லை—ஏற்பட்ட நன்மையும் ஒன்றும் இல்லை.

"இப்படி வீணாக்கும் நேரத்தை—நேரத்தின் அருமையை உணர்ந்து பயன்படுத்த வேண்டும். சீரணி போன்று பணியாற்ற நம்மிடையே நிரம்ப வலிமையுள்ளது—அறிவாற்றல் உள்ளது; எனவே, பணிபுரிவோம்—பயனடைவோம்!"

இவ்வாறு அண்ணா அவர்கள், 12—11—67 அன்று வேலூர்—கோட்டை வெளியில் சீரணியைத் துவக்கிவைத்தும்—விளையாட்டு அரங்கிற்கு அடிக்கல் நாட்டுவித்தும் உரையாற்றுகையில் அன்பழைப்பு விடுத்தார். அவரது உரை வருமாறு:—

அறிஞர் அண்ணா

"சீரணி ஒரு கட்சியின் அமைப்பு அல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாகக் காங்கிரசுக் கட்சியினர் உள்பட அனைத்தக் கட்சியினரும் இங்கே கலந்துகொண்டிருக்கிறார்கள்.

சட்டமன்றத்தில் ஏற்கனவே நான் கூறியதுபோல், இன்று சிலரது சந்தேகங்கள் நீங்கி—நாடும் ஏடும் போற்றும் அளவுக்குச் சீரணி செயல்பட இருக்கிறது.

வடாற்காடு மாவட்டம் எல்லா நிலையிலும் சிறப்பாக உள்ளது. மக்களது எழுச்சியும், ஒத்துழைப்பும் என்றும் நமக்குக் கிடைத்திருக்கிறது — கிடைத்தும் வருகிறது!

இங்கே வந்துள்ள 2,500 பேர் மட்டுமன்றி, இன்னும் ஆயிரக் கணக்கில் சேரத தயாராக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். 'இப்போதைக்கு இவ்வளவு போதும்' என்று மாவட்ட கலெக்டர் நினைத்ததால்தான் இவ்விழா நடைபெறுகிறது.

நீங்களெல்லாம் எழுச்சியோடும் அமைதியாத்தும் ஊர்வலம் நடத்தி—உறுதிமொழியும் எடுத்துக் கொண்டதிலிருந்து, நீங்கள்செய்யவிருக்கும் பணியையும் சிறப்பாக முடிப்பீர்கள் என்பதிலே எனக்கு சிறிதும் ஐயமில்லை.

'சீரணியும்' படையும்!

ஐயப்பாடுகள் நீங்கிவிட்டதென்றாலும், இங்கே பேசியவர்கள், 'சீரணிப் படை' என்று அழைத்து—நாம் ஏதோ படையை ஏற்படுத்தியிருப்பதுபோல் பேசினர். படைகள் செய்யும் வேலைகளை நாம் மேற்கொள்ளப் போவதில்லை!

'படை' என்றாலும் பல அணிகளைக் கொண்டதுதான்; 'சீரணி' என்பதிலேயே, 'அணி' என்பது தெளிவாகிறது! இதைப் பற்றி நாவலரிடம் கேட்டால், இலக்கிய—இணக்கணங்களோடு விளக்குவார்!

அந்தப் பெருமை வேறு!

'சீரணியினர் செய்கிற காரியங்களை அரசாங்கமே செய்யக் கூடாதா?' என்று கேட்கலாம்.

சமைக்கவேண்டுமானால், அதற்கான பொருள்கள் அனைத்தையும் கடை வீதிக்குச் சென்று வாங்கி வருகிறோம்; கடையிலே வாங்கி வரும் காய்கறிகளைவிட, நமது தோட்டத்திலே ஒரு மூலையில் இரண்டு பாத்திகளில் விளைவித்த காய்கறிகளைச் சமைத்துச் சாப்பிடும்போது, அவற்றில் தனியான சுவை இருப்பதாக உணருகிறோம்!

அதைப்போல், 'எல்லாக் காரியங்களையும் அரசே செய்யும்' என்று இல்லாமல் நாமாகச் சேர்ந்து செய்வதனால் ஒருவகை தனி இன்பம்—நிறைவுபெற முடியும்!

'இங்கே கட்ட இருக்கும் அரங்கில் எனது உழைப்பும் இருக்கிறது' என்று எண்ணுகிறபோது, உண்மையில் நாம் பெருமை கொள்கிறோமல்லவா?

இருந்தாலும், இந்தச் சீரணி, பெரிய பெரிய கட்டிடம்—பெரிய அணைகள் யாவும் கட்டி முடிக்கும் என்று நான் சொல்லவில்லை. நம்மாலான உழைப்பில் சிறிய சிறிய பணிகளைச் செய்துமுடிப்போம்!

பணம் மட்டுமா மீதி?

இங்கே உங்களால் கட்டப்படவிருக்கும் விளையாட்டு அரங்கின் மூலம்—உங்களது உழைப்பால்—ரூ. 1 இலட்சம் மீதப்படும் என்று கலெக்டர் பேசுகையில் கூறினார்.

இதில் பணம் மட்டும் மீதமாகவில்லை; 'இந்த அரங்கில் எனது உழைப்பும் இருக்கிறது' என்றும் பெருமிதமகொள்ள இயலும்!

அத்தகைய பெருமிதத்தில்தான் சனநாயகம் செம்மைப்பட முடியும—செயல்பட முடியும்.

சனநாயகத்திற்கு சிறப்பைத் தரும் வகையில் நீங்களெல்லாம் பணிபுரியுமாறு வேண்டுகிறேன்.

'இரவல் படை'யை நம்புகிறோமா நாங்கள்?

சட்டமன்றத்திலே சீரணி பற்றி அறிவித்தபோது, சிலர் சந்தேகப்பட்டார்கள் — சிலர் கேட்கவும் செய்தார்கள்—'கட்சி வளர்க்கும் முயற்சியா' என்று!

என்னுடைய கட்சி, எந்த இரவல் படையையும் நம்பி இன்றையத்தினம் இல்லை! இந்த சீரணி நாட்டிற்காகவே ஏற்படுத்தப்பட்டது!

அரசே செய்வதானால்...!

சென்னையிலே சீரணியினர் பள்ளிக்கூடம் கட்டிய பாங்கை, ஜெயப்பிரகாசர் பாராட்டியதை இங்கே எடுத்துச் சொன்னார்கள்; அது மட்டுமன்று; வியாசர்பாடி பகுதியில் 3,000 அடி வாய்க்காலை வெட்டியிருக்கிறார்கள்.

'இதை அரசாங்கமே செய்யக் கூடாதா?' என்றால் முடியும்.

சீரணியினரால் இந்தப் பணி 10 நாட்களில் முடிந்ததை—அரசே செய்வதானால் — முதலில் நான், ஒரு அதிகாரியை அழைத்துக் கேட்பேன்; அவர், அந்தப் பணி தனது அதிகாரத்துக்கு உட்பட்டதுதானா என்று வேறொரு அதிகாரியைக் கேட்பார்; அவர், 'மழை பெய்தால் உண்மையில் அந்தப் பகுதியில் வெள்ளம் வருமா என்று பார்வையிட வேண்டும்' என்பார்; இதற்குள்ளாக மழையும் வரும் — வெள்ளமும் வந்துவிடும்!

வியாசர்பாடியில் வெட்டிய வாய்க்காலுக்குத் தற்போது அரசாங்கம்—அவை சரிந்துவிழாமல் இருக்க—சிமெண்டுப் பலகைகள் பொருத்த ஏற்பாடு செய்துவருகிறது.

நமக்குப் புதிதல்ல!

திருச்சி மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் ஏற்கனவே துவக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள்; இன்று வடாற்காட்டில் துவக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட பணிகள் நமக்கொன்றும் புதிதல்ல. பழங்காலத்திலே நமது பெரியவர்கள் செய்ததுதான்!

எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை அணுகும் நிலைமை ஒழிய இத்தகைய குடி மராமத்து வேலைகளை நாமே செய்துகொள்ள முயற்சிக்கிறோம்.

உழைப்பை ஏற்போம்!

சில மாதங்களுக்குமுன் முகையூர் தொகுதியில் ஒரு திருமணத்திற்காகச் சென்றிருந்தேன்; ஒரு காட்டு வழியாக 3 மைல் தூரம் அந்த ஊருக்குப் போகவேண்டியிருந்தது; அந்த மூன்று மைல நீளப் பாதையை—நான் வருகிறேன் என்பதற்காக—அந்த ஊர்ப் பிரமுகர் ஒருவர் இரவோடு இரவாகத் தீவட்டிகளை ஏற்றிவைத்துச் சுற்றுப்புற ஊர்களிலிருந்தெல்லாம் மக்களை வரவழைத்துச் செப்பனிட்டு அமைத்ததாக ஒரு கதையையே சொன்னார் அமைச்சர் கோவிந்தசாமி!

அந்தப் பாதை ஒருவடைய தனிச் செல்வாக்கைப் பயன்படுத்திப் போடப்பட்டது; 'அப்படிப்பட்டவைகளை நாமெல்லாம் ஒன்று கூடிச் செய்வோம்' என்றுதான் நாங்கள் கூறுகிறோம்.

வெளிநாட்டிலிருந்துவந்த தலைவர் ஒருவர் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்; 'இந்தியாவில் நான் சுற்றிப் பார்த்ததில், தெருச்சந்திலும் திண்ணைகளிலும் நால்வர் - ஐவராகச் சேர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்களே —அப்படி என்ன பேசிக்கொள்கிறார்கள்' என்று!

'எனக்கும் 60 வயதாகப் போகிறது; எனக்கே தெரியவில்லை' என்றேன்!

"இருந்தாலும் மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருப்பது ஒரு தனிச் சாமர்த்தியம்தான்" என்றார் அவர்!

இப்படி கோடி வீட்டு சொக்கலிங்கமும், சோணாசலமும், கதைகளைப் பேசிக்கொண்டே நாள் கணக்கில் நேரத்தை வீணடிக்கின்றனர்; 'இது முறைதானா' என்று யோசிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

ஊருக்கு ஊர் சீரணி!

தனக்கென்று வாழாது பிறருக்காக வாழ வகைசெய்வதே நோக்கம்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

"ஓர் ஏழை நாட்டில் எல்லா வசதிகளையும் அனுபவிக்க—அதை ஏற்படுத்தித் தர எந்த அரசாலும் முடியாது! சிறு சிறு வசதி வாய்ப்புக்களை, சீரணியினர் போன்று பொதுத் தொண்டாற்றும் அணியினராலேயே நிறைவேற்றித் தரமுடியும்!

"வாரத்திலே ஒரு நாள்—ஒரு நாளிலே சில மணி நேரம் ஓய்வை நீக்கி இப்படிப்பட்ட பணிகளுக்குச் செலவழித்தால், இந்த மாவட்டத்திற்கான அத்தனை வசதிகளையும் செய்து முடிக்கலாம்!

"இந்த உலகம் இருப்பதற்குக் காரணம், தனக்கென்று வாழாமல் பிறருக்காக வாழ்வதால்தான்' என்றார் வள்ளுவர்!

"அதுபோல், ஊருக்கு ஊர் சீரணி ஏற்படுத்திப் பிறருக்குப் பயன்படப் பணிசெய்து வாழ்வோம்! நாடும் வளரும்—நாமும் வாழ்வோம்!"

இவ்வாறு கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வடாற்காடு மாவட்ட சீரணித் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் விளக்கிக் கூறிக் கேட்டுக்கொண்டார். அவரது உரை வருமாறு:—

12—11—67 அன்று வேலூர் கோட்டை வெளியில், 2,500 தொண்டர்களைக்கொண்ட வடாற்காடு மாவட்டச் சீரணியைத் துவக்கிவைத்து—ரூ. 4 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் விளையாட்டு அரங்கிற்கான அடிக்கல்லை அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டினார்கள்.

விழாவிற்கு, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமைவகித்தார்.

வேலூர் காந்தி சிலையிலிருந்து வேலூர் தெற்குப் போலீசு நிலையம் வரையில் உள்ள இரண்டு பர்லாங் பாதையைச் சீர்செய்யும் பணியை, வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கோவிந்தசாமி துவக்கிவைத்தார்.

சீரணித் துவக்க விழாச் சிறப்பு மலரை, தமிழகச் சட்டப்பேரவைத் துணைத்தலைவர் புலவர் கோவிந்தன் வெளியிட்டார்.

முதலில் சீரணியினரைப் பார்வையிட்டு, மரியாதை வணக்கத்தை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

சீரணியினர், சுற்றுலா மாளிகையிலிருந்து புறப்பட்டு நகர் வலமாக கோட்டைத் திடலை வந்தடைய மூன்றுமணி நேரம் பிடித்தது.

ஊர்வலத்தில் தமிழக அரசின் கொள்கைகளை விளக்கும் அலங்கரிக்கப்பட்ட டிரக்குகள் வந்தன.

துவக்க விழாவில், சட்டமன்ற உறுப்பினர்களான பலராமன், கோதண்டராமன், திரு. கபூர், மற்றும் வடாற்காடு மாவட்டச் சீரணித் தலைவர் இரா. தருமலிங்கம், திருமதி பர்வதவர்த்தினி ஆகியோர் பேசினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெல்லியப்பா, அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

வேலூர் நகர் மன்றத் தலைவர் திரு. மா. ப. சாரதி எம்.எல்.ஏ. நன்றி கூறினார்.

இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையுரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"வேலூர் கோட்டை வெளியில் இன்று வடாற்காடு மாவட்டச் சீரணியைத் துவக்குவது பல வகையில் சிறப்புற்று விளங்குகிறது.

இதே கோட்டைக் கொத்தளத்தில்—மன்னர்கள் காலத்தில்—படை வீரர்கள் நடைபயின்றனர்! படைகளுக்குப் பயிற்சி தரும் கொத்தளமாக இது விளங்கியது!

இன்று தமிழக அரசால் அறிஞர் அண்ணாவின் சீரணிப் படை துவக்கப்பட்டு நடை பயிலுகிறது!

இதேபோன்று, சென்னையிலே துவக்கப்பட்ட அணி சாதித்துள்ள சாதனைகளைப் பலர் பாராட்டியுள்ளனர்.

ஒரே கல்லில் மூன்று மாங்காயை அடித்து வீழ்த்துவதுபோல் இந்தச் சிறப்பு நிகழ்ச்சியின் மூலம் வடாற்காடு சீரணியைத் துவக்குவதுடன், விளையாட்டு அரங்கிற்கான அடிக்கல் நாட்டு விழாவும், சாலைச் சீர்திருத்தும் பணியின் துவக்க விழாவும் இன்று இங்கு நடைபெறுகிறது.

இப்படிப்பட்ட அறிவுப் படையை—ஆற்றல் படையை, தமிழக மாவட்டங்கள்தோறும் துவக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

'வெளி மாநிலத்தவரும் பாராட்டும் வகையில் பணியாற்றுவோம்'

வட ஆற்காடு மாவட்டச் சீரணித் தலைவர் இரா. தர்மலிங்கம் உறுதிமொழி

வேலூர், நவ. 12—

இன்று இங்கு நடந்த சீரணித் துவக்கவிழாவில், வடாற்காடு மாவட்டச் சீரணித் தலைவரும் மாவட்ட தி.மு க. செயலாளருமான திரு. இரா. தருமலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

'வடாற்காடு மாவட்டத்தின் சீரணியில் இவ்வளவு திரளாக வந்து கலந்துகொண்ட தோழர்களுக்கு நன்றி கூறிக்கொள்வதுடன், 'நாங்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டதுபோல நாங்கள் செய்யவிருக்கும் பணிகளைச் செம்மையாக முடிப்போம்' என்று உறுதி கூறுகிறேன்.

இம்மாவட்டச் சீரணியின் முதற் பணி, இங்கே ரூ. 4 இலட்சம் செலவில் விளையாட்டு அரங்கம் கட்டுவதும் காந்தி சிலையிலிருந்து தெற்குப் போலீசு நிலையம் வரையிலான பாதையை செப்பனிடுவதுமாகும்.

இப்படிப்பட்ட பணிகள் இன்னும் எத்தனையோ இந்த மாவட்டம் முழுவதிலும் செய்யப்படவிருக்கின்றன.

சீரணியினரின் பணிக்கு அரசாங்கம் செய்யும் செலவில் பத்தில் ஒரு பங்கினைச் சீரணித் தொண்டர்களுக்காகக் கொடுக்க அறிஞர் அண்ணா அவர்கள் முன்வர வேண்டும்.

இப்படி, பத்தில் ஒரு பங்கைச் சீரணிக்குச் செலவிடுவதால், மேலும் உற்சாகம் பெற ஏதுவாகும். அதனால் செய்து முடிக்கும் பணிகளை விரைவில் முடிக்கலாம்.

அதோடு, இந்த மாவட்டத்திற்காக இந்த ஆண்டு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள சீரணி நிதியை, வருகிற மார்ச்சு மாதத்திற்குள் கொடுத்து உதவுமாறு முதலமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதனால் செய்யவிருக்கும் பணிகளை விரைவில் முடிக்க முடியும் என உறுதி கூறுகிறேன்.

இந்த மாவட்டச் சீரணியினரின் சீரிய பணிகளை, தமிழ்நாட்டில் உள்ள மற்ற மாவட்டங்கள் மட்டுமன்றி, இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களும் பாராட்டும் வகையில் முடித்துக் காட்டுவோம் என உறுதி கூறுகிறேன்.

'சீரணித் தலைவன்' என்கிற முறையில் மீண்டும் சீரணித் தொண்டர்களின் சார்பில் எங்களது உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

டில்லி அரங்கம் -- 3

காமராசரின் 'கன்சென்சஸ்' முறை- சுப்பிரமணியத்துக்குப் பயன்படட்டுமே!

'தண்ணீர்' என்ற பெயர் எல்லோருக்கும் தெரியும்; அதுவே, 'H2O' என விஞ்ஞானத்தில் அழைக்கப்படுகிறது என்பது பலருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை!

காமராசருக்கே தெரிந்திருக்குமோ தெரியாதோ—அவர், இரண்டு தலையமைச்சர்களைத் தேர்ந்தெடுத்ததன், அரசியல் விமர்சகர்கள், 'கன்சென்சஸ் முறை' (Concensus Method) என்று பெயரிட்டு அழைத்து வருகிறார்கள் என்பது!

'தண்ணீர்' என்றுமே போதும்—குளிர்ந்த நீரைக் குறிப்பிடுவதற்கு; ஆனால், 'பச்சைத்தண்ணீர்' என்றுள்ளான, 'வெக் நீரார்?' என்ற கேள்வி பிறக்காமல் இருக்கிறது!

ஒருவரைத் தேர்ந்தெடுப்பது என்றாலே, 'பொதுக் கருத்து' என்ன என்று தெரிந்துகொள்வதுதான் முறை—வழக்கம்!

'நியாயப்படி' என்ற நிலை வந்தால்தான், சுய இச்சையாக இயங்க முடியும்!

கேரளாவுக்குப் பின், சாஸ்திரியையும், இந்திராவையும் கட்சியின் நிர்வாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்குமாறு—'தலைவர்' என்ற முறையில்—காமராசர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

ஆனால என்ன காரணம் பற்றியோ, 'கன்சென்சஸ் முறை'யின் கதாநாயகனுக்கிவிட்டார் காமராசர்!

பிறக்கும் இடத்தில் நதிகள் பெரும் பயன்தராததுபோல், அவரது 'கன்சென்சஸ்' முறை, இப்போது காங்கிரசின் தலைவர் தேர்தலுக்குப் பயன்படுவதாகக் காணோம்!

சாஸ்திரியைத் தொடர்ந்து காமராசரின் 'கன்சென்சஸ்' முறையினுல் பயனடைந்த இந்திரா, 'போட்டியில்லாவிட்டால் மேலும் நீடிக்கிறேன்' என்று உரத்த குரலில் பல இடங்களில் காமராசர் கூறியதன்ால் கவனத்தில் ஏற்றுக்கொண்டவராகவே காட்டிக்கொள்ளாமல், நந்தாவை களத்தில் இறக்கியிருக்கிறார்!

சாமியின் பெயரைச் சொல்லிக் கொண்டு வீட்டிலுள்ளவர்கள் விருந்து சாப்பிடுவதைப்போல், காமராசர் விருமபினுல் அவரே நீடிக்கட்டும்; நான் விலகிக்கொள்கிறேன்' என—'இந்திரா வின் வேட்பாளர்' என்ற பெயரில் அறிமுகமாகியிருக்கும் நந்தாவைப் போலவே, 'காமராசரின் பிரதிநிதி' என்று கூறப்படும் மற்றெருரு போட்டியாளராான பாட்டீலும் கூறியிருக்கிறார்!

கொடுப்பவரும் கரம் நீட்டாமல்—வாங்குபவரும் கை உயர்த்தாமல இருந்தால், பரிவர்த்தனை பேச்சளவில்தான் இருக்கும்!

அதைப்போல், போட்டியாளர்களோ, 'காமராசர் விரும்பினுல் அவரே ஏகமனதாக நீடிக்கட்டும்' என்கிறார்கள்!

ஆனால் காமராசரோ, 'போட்டி இல்லாவிட்டால் பதவியில் நீடிக்கிறேன்' என்கிறார்!

வினயாட்டுப் போட்டிகளில், ஆடும் நேரத்தின் முடிவு நெருங்குகையில், இருக்கும் நிலையை இழக்க விரும்பாத இரு கடசிகளும், 'டைம் அவுட்' கேட்டுக் காலத்தைக் கடத்துவதுபோல், மூன்று தரப்புக்களுச் சார்ந்தவர்களும், இடையில் நிகழ இருக்கும் சம்பவங்களுக்காகத்தான் இப்படிப் பேசிப் பொழுதைக் கழிக்கின்றனர்!

தான் மீண்டும் தலைவராக வருவதற்குப் பல வகைகளிலும் சாத்தியக் கூறுகள் இல்லாதிருப்பதன்ால் கண்டறிந்த பிறகுதான், காமராசர், வழக்கமான 'அமைதிப் போக்'கினுக் கடைபிடிப்பது மட்டுமல்ல—'பாட்டீல் அவரது வேட்பாளர்' என்று பிறர் கருதுவதன்மையும், மறுக்காமல் இருந்துவருகிறார்!

'எனது ஆதரவாளர்' என்று தாம் கூறுவிட்டாலும், 'பிறர் கூறுவதை வைத்தேனும், கட்சி மட்டத்தில் பாட்டீலுக்கு எந்த அளவு வரவேற்பு இருக்கிறது' என்பதன்மீத் தெரிந்துகொள்ளும் ஒரு நடிநிரமாகவும் இதன்ால் காமராசர் கருதுவதற்கு இடமிருக் கிறது!

★ "பாட்டீலுக்குப் பதில், உண்மையாகவே அந்த இடத்தில் சுப்பிரமணியம் ஏன் இருக்கக்கூடாது?" என்ற ஒரு கேள்வியின் மற்ற மாநில காங்கிரசுக்காரர்கள் கேட்கலில்லையாயினும், காமராசரை நோக்கித் தமிழகம் கேட்பதன், 'தவறு' என்று கொள்ள முடியாது.

'தேர்தல்களில், டம்மி (மாற்று) வேட்பாளர்கள் இருக்கவேண்டும்' என்ற நியதிக்காகவும் இருப்பதுண்டு; உண்மை வேட்பாளர், 'தகுதி இல்லாதவர்' என மறுக்கப்பட்டால், 'வேண்டுமே' என்று தேவையையொட்டியும் நிறுத்தப்படுவதுண்டு!

இன்றிருக்கும் நிலைமைகள் வரை, காமராசர், கட்சியின் தலைவராக வருவதென்பது உறுதியற்ற நிலையிலேயே இருக்கிறது! ஆனுல், போட்டி இல்லையென்ருல், அவர் தயாராக இருக்கிறர்!

'போட்டி' என்று வந்தால், 'வேண்டுமே' என்பதற்காக, காமராசரின் டம்மி வேட்பாளராக பாட்டீல் அறிமுகமாகியிருக்கிறர்!

★ தவிப்பட்ட வெறும்புகளினுலோ திறமைக்குறைவினுலோ அல்லது கட்சியின் சரிவு காரணமாகவோ மீண்டும் ஏகமனதாகத் தலைவராக வருவதற்கு எதிர்ப்பு இருக்கிறது என்பது உண்மை யாகுமி, காமராசர், தனது இடத்தின் நிரப்புவதற்கு ஏன் சுப் பிரமணியத்தைப் பயன்படுத்தக்கூடாது?

★ அப்போது வெளிச்சமாகிவிடும் அல்லவா—'ஒரு தெற்கத்தியர் தலைமைப் பதவியில் இருக்க இனியும் அனுமதிக்கக்கூடாது' என்ற ஒர் எண்ணம், அங்கே உண்மையில் உண்டா இல்லையா என்பது?

★ "என்னைப் பிடிக்கவில்லையென்ருல் சரி—போகட்டும்; சுப்பிரமணியம் வருவதுபற்றி உங்கள் எண்ணம் என்ன?" என்று காமராசர், தனக்குப் பழக்கமான கருத்து வாக்கெடுப்பினைப் பரிட்சை செய்து பார்க்கலாமில்லவா?

★ காமராசருக்கு விரோதமாகிவிட்ட இந்திராவுக்கும் வேண்டியவர் தானே—சுப்பிரமணியம்?

★ காமராசர் எப்படி அழைக்கப்பட்டாரோ அதேபோல், மத்திய அமைச்சரவைக்கு நேருவின் பிரியத்துடன் சென்றவர்தானே சுப்பிரமணியமும்?

★ தேர்தலில் தோற்றலும், 'சுப்பிரமணியம் போன்றவர்கள் அரசியலில் வேறே இல்லாதவர்களாக இருக்கக்கூடாது' என்ற பெருந்தன்மையுள்ளதனே அண்ணு அவர்கள், 'தென் சென்னைத் தொகுதியை அவருக்கு விட்டுக்கொடுக்கத் தயார்' என்ற நிபந்தனையைத் தந்தார்கள்?

★ பாட்டீலே விட்டு வைப் பரீட்சை பார்ப்பதற்குப் பதில், காமராசர், ஏன் சுப்பிரமணியத்தையே பிரேரேபித்து, அவரை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க முயலக்கூடாது?

★ "காமராசர், போட்டியின்றி இரு தலைமையமைச்சர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கலில்லே; அதே முறையில், தனக்குப்பின் கட்சிக் காக ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்தார்" என்ற பெருமைக் காக ஏன் அவர் பாடுபடக்கூடாது?

★ "காமராசர், நிந்திராவைத் தேர்ந்தெடுத்தார்; காமராசரும் இந்திராவும் சேர்ந்து கடிதி தலைமைக்கு சுப்பிரமணியத்தைத் தேர்ந்தெடுத்தனர்" என்ற நிலை ஏன் பிறக்கக்கூடாது?

★ 'காங்கிரசில் உள்ள இளிர சோஷலிசக் குழுவின் அனுதாபி' எனப்படும் நந்தாவும்—'சோஷலிசக் கொள்கைகளில் பிடிப்பு இல்லாதவர்' எனவும், 'நடைமுறைக் கொள்கைகளுக்கும் அவ்வப்போது மாற்றுக் கருத்துக்களச் சொல்பவர்' எனவும் பெயர்பெற்ற பாட்டீலும் போட்டியிடுவது, கட்சியின் போக்கை மேலும் நகைப்புக்கு இடமாக்குவதைத் தடுப்பதற்காகவேனும், ஏறக்குறைய எல்லாத் தரப்பினரும் விரும்பும் சுப்பிரமணியத்தை, காமராசர் ஏன் 'கருத்துப் பதிவு' முறையின்மூலம் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கக்கூடாது?

காங்கிரசு வட்டாரங்களில் இந்தக் கேள்விகளெல்லாம் தோன்ருது, விம்பினேன்தான் கொடுக்கிறது!

—எஸ். ஆர்.

சங்ககிரி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல்

19--11--67-ல்

கழக ஆட்சிமன்றக் குழுக் கூட்டம்

சேலம் மாவட்டம் சங்ககிரி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் குறித்துத் தொகுதி நிலைமைகளையும், தேர்தல் நில வரங்களையும் ஆய்ந்து பொதுச் செயலாளர் அவர்களுக்கு அறிவிப்பதற்காக, கழக ஆட்சிமன்றக் குழுக் கூட்டம், 19—11—67 ஞாயிறு காலை 11-மணிக்கு, சங்ககிரி வழிப் போக்கர் விடுதியில் கூடுகிறது.

ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தின்போது, சேலம் மாவட்டக் கழக நிர்வாகிகள், சம்பந்தப்பட்ட வட்டத்தின் கழக நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் வருகை தந்து, தேர்தல் நிலைமைகளையும் மற்றும் வேட்பாளர்கள் விவரங்களையும் அறிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்'
சென்னை-13
16..11..67

என். வி. நடராசன்
அமைப்புச் செயலாளர்
நி.மு.க.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறோம் — துவக்க இருக்கிறோம்! இன்று இங்க மாவட்டத்தில் துவக்குகிறோம்!

பொதுமக்களின் நல்லாதரவையும், தன்மையையும் கொண்டு செய்யப்படும் எந்தக் காரியமும், அரசினரால் செய்யப்படும் பணிகளிலிடச் சிறந்ததாகும்

எனவேதான், அறிஞர் அண்ணு அவர்கள் இப்படிப்பட்ட சீரணியை தத் துவக்கிவருகிறார்கள்!

இங்கே கட்டப்படவிருக்கும் வினயாட்டு அரங்கம், இந்த நகரத்தின் கலாவாப்புக்கு அடிப்படையாக அமையும்.

நல்வாழ்விற்கு — நல்ல உடல் வளம் தேவை; உடல் வலிமை பெற உள்ளம் தேவை; உடல் வலிமை பெற உறுதியும் வினயாட்டுக்களுர் தேவை!

வினயாட்டிலே போட்டி இருக்க வேண்டும்; அர்த்தப் போட்டிகள் கடைபெற இப்படிப்பட்ட அரங்குகள் நாடு முழுவதும் ஏற்பட வேண்டும்.

இப்படிப்பட்ட அரங்கங்கள் வேறு நான்கு மாவட்டங்களில் கட்ட முயற்சி எடுக்கப்படுகிறது; அவற்றை உங்களாப் போன்ற அணிகளால்தான் முடிக்க முடியும்.

இப்படிப்பட்ட படைகளால் எனக் குத்தான் அதிக நன்மை; ஏனெனில், இன்னும் நாட்டிலே கட்டி முடிக்காமல் — கட்டப்படவிருக்கும் பள்ளிகள் அநேகம் இருக்கின்றன; அவற்றையெல்லாம் உங்களது முயற்சியால் கட்டி முடிக்கலாம் என நம்புகிறேன்.

நீங்கள் முயற்சி செய்தால், பள்ளிகள் எனன—மாட மாளிகை கூடவே எழுப்ப முடியும்!

சென்னைச் சீரணியினர்—ரு. 25 ஆயிரம் மதிப்பில் கட்டவிருந்த பள்ளியை—ரு. 4 ஆயிரம் செல விலேயே கட்டி முடித்தார்கள்.

மற்றும், நாடு முழுவதிலும் மருத்துவமனைகள்—பொது மன்றங்கள்—சிராமச் சாலைகள் போன்ற தவை ஏற்படுத்தி, நிறைவேற்ற வேண்டியுள்ளது அதற்கான முயற்சியில் நீங்களெல்லாம் எழுச்சியோடு வந்தமைக்கு நன்றி."

நேரமில்லை

தமிழகத்தின் முதலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீடாளராகவும், அச்சிடுவோராகவும் கொண்டு எழுதி, அச்சகத்தில் (24, ஆண்டாளர் தெரு, பிராட்வே, சென்னை-1) அச்சிடப்பட்டு, நம் நாடு வெளியீட்டகத்தில் (பிராட்வே, சென்னை-1) இருந்து வெளியிடப்படுகிறது.

மேற்கு வங்க அரசியலில் 'புயல் சின்னம்!'

" காங்கிரசல்லாத நிர்வாகம் நடைபெறும் மாநிலங்களில், மத்திய அரசினு ஏஜெண்டுகளாகக் கவர்னர்கள் பணி புரிகிறார்களா?"

என்ற விமர்சனம், 'உறுதியாகிறதோ' என்று ஐயுறத்தக்க வகையில்,

" கவர்னர்கள் அதிகாரம் காங்கிரசு ஆட்சி நடைபெறும் மாநிலங்களுக்கு 'ஒரு மாதிரி'யாகவும், காங்கிரசல்லாத நிர்வாகம் நடைபெறும் மாநிலங்களுக்கு மற்றெரு வகையாகவும் பொருள்கொள்ளப்படுகிறது"

என்ற குற்றச்சாட்டு, 'உண்மைதான் போலிருக்கிறது' என்று பொதுமக்கள் பீதிகொள்ளும் நிலையில், மேற்கு வங்க அரசியல் நிலைமைகளில் புயல் சின்னம் தோன்றியுள்ளது.

'டிசம்பர் 18-ந் தேதிதான் கூட்ட முடியும்' என்று முதல்வர் அஜாய் முகர்ஜி முன்னரே தெரிவித்திருந்தும்,

'உடனடியாகச் சட்டமன்றத்தைக் கூட்டுக' என்ற கவர்னரின் 'பிரசித்தி பெற்ற' கடிதம், 'மத்திய அரசின் 'ஆசை'களை நிறைவு செய்வதாக இருக்கிறது' என சில தரப்பினர் எண்ணுகின்றனர்!

வங்க அமைச்சரவை, போதிய பலமின்மையால் பதவி இறங்க நேர்ந்தால், ஏறகனவே அங்கு நிலவிவரும் குழப்ப—மறைமுக குழச்சிகளப் பயன்படுத்தி, 'சமுதாய—நாட்டு விரோத சக்திகள் மேலும் கலகம் விளவிக்கலாம்' என்ற கருதலிருந்தால், முன்னேற்பாடாக இராணுவத்தைத் தயார் செய்து வைத்திருப்பதன், 'இந்த விஷயத்தில் புதுடில்லியும் ஒரளவுக்கு 'குறுக்கிட' வேண்டியிருக்கிறது என்பது, காங்கிரசு—மத்திய அரசுத் தரப்பினர் கருத்தாக இருக்கிறது!

அரசியல் நோக்கமோ அல்லது பொதுவான பாதுகாப்பு உணர்வோ—புதுடில்லியின் மேற்கு வங்க நடவடிக்கைகள், 'மத்திய -- மாநில அரசுகளின் உறவு முறைகளைக் கெடுப்பதாக அமையக்கூடாதே' என, நடுநிலையாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர்!

"இப்போதுள்ள அமைச்சரவை தோற்றலும், மறு தேர்தல் தேவையில்லை" என காங்கிரசு கருதுவதன் மூலம், வாய்ப்புக் கிடைத்தால் அது, மற்றெரு கூட்டு அமைச்சரவை அமைக்க முயலுமெனத் தெரிகிறது!

இதற்கிடையில், இரஷ்யப் புரட்சி விழாப் பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கும் மேற்கு வங்கத் துணை முதலமைச்சர் ஜோதிபாசுவின் கருத்துகளை, வங்க நிலைமைகளின் கொதிப்பு நிலைமையைக் காட்டுவதாக இருக்கிறது; அவர் பேசியது இது :—

"இப்போதுள்ள அமைச்சரவை கலிழக்கப்பட்டால் அதனுல் எழும் மக்கள் எழுச்சியைப் போலீசோ, இராணுவமோ, டாங்கிகளோ தடுத்து நிறுத்த முடியாது!

"ஆயுதபாணியற்ற அந்த மக்களின் திரண்டெழுந்த எதிர்ப்புக்கு முன்னுல், துப்பாக்கிக் குண்டுகள் தோற்றேருடும்!

"'மத்திய அரசுக்கு டாங்கிகள் எத்தனை? துப்பாக்கிகள் எவ்வளவு?' என்றுதான் பார்த்துவிடுவோம்!"